செய்தி வெளியீடு எண்.840 நாள்.7.10.2008

பத்திரிக்கைச் செய்தி

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கட்கு இலவச வேலை வாய்ப்பு முகாம்

சென்னை கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் இயங்கி வரும் வேலை வாய்ப்பு பிரிவு சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கு பயனளிக்கும் வகையில் ஒரு வேலை வாய்ப்பு முகாமினை சென்னை மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற மாணவர்களுக்காக நடத்த திட்டமிட்டுள்ளது.

சென்னை நகரையும், அதை ஒட்டியுள்ள பகுதிகளிலும் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று பட்டம் பெற்ற ஆண்கள் சுமார் 600 பேருக்கு விற்பனை அதிகாரிகளாக பணி நியமனம் அளிக்க இந்தியாவின் முன்னணி தொலை தொடர்பு குழுமம் முன்வந்துள்ளது. இவர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக வரும் 10.10.2008 மற்றும் 11.10.2008 ஆகிய இரு நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வேலை வாய்ப்பு முகாம் சென்னை–39 வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கார் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் நடத்தப்படும்.

முகாமில் கலந்து கொள்ள வருபவர்கள் தங்களின் தன்விவர படிவத்தை கொண்டு வருதல் வேண்டும். முகாமில் கலந்து கொள்ள நுழைவுக் கட்டணம் ஏதுமில்லை.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

செய்தி வெளியீடு எண்.840 நாள்.7.10.2008

# FREE JOB FAIR FOR OLD STUDENTS OF GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGES

The Placement Cell in the Directorate of Collegiate Education has organized a job fair, exclusively, for male graduates and old students of Government Arts and Science Colleges in and around Chennai at Dr. Ambedkar Government Arts College (Autonomous), Vyasarpadi, Chennai – 600 039. The Job Fair is part of the State's initiative to reach out to the students of Government Arts Colleges at Chennai and its suburbs.

The two day Job Fair will be held at the premises of Dr. Ambedkar Government Arts College (Autonomous), Vyasarpadi, Chennai-600 039 on 10-10-2008 and 11-10-2008 between 10.00 a.m. and 5.00 p.m. All Male Graduates of Government Arts and Science Colleges are advised to avail of this opportunity. A leading telecom industrial house plans to recruit suitable candidates as sales officers. There are 600 positions are available as per company's estimates.

Job aspirants must bring their resume. There is no entry fee.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**